**OS No.35 /2024**

PW 1 - அழகுவிஸ்வராஜன்

நாள் 26.02.2026

**வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

தாவா சொத்தை நான் தங்கம் ( எ ) தங்கசாமியிடம் கிரையம் வாங்கினேன் அவருக்கு சொத்து எப்படி பாத்தியம் என்ற விபரம் எனக்குத் தெரியாது. பட்டா அவர் பெயரில் இருந்தது. அவர் பெயரில் இருந்த பட்டாவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

தாவா சொத்திற்கு தங்கம் ( எ ) தங்கசாமியிடம் பெயரிலோ அல்லது என் பெயரிலோ உள்ள சொத்திற்கான வரி ரசீதை நான் தாக்கல் செய்யவில்லை. தங்கம் ( எ ) தங்கசாமியிடம் மதுரை மாவட்டத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான்.

புல எண் 70 என்பது தான் பல்வேறு உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அரசு ஆவணங்களில் புல எண் 70 என்பது இளையநாயக்கன் பெரியகம்மாய் என்று தான் உள்ளது என்றால் தெரியாது. புல எண் 70 என்பது பல்வேறு நபர்களுக்கு கொடுக்கப்பட்ட ஒப்படைப்பு பட்டாவை ரத்து செய்யக்கோரி பிரதிவாதிகளும், அவர் கிராமத்தை சேர்ந்தவர்களும் அரசிற்கு மனு கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

29.05.2024 ம் தேதி மானாமதுரை தாசில்தாரை விசாரித்து RTO அவர்களுக்கு புல எண் 70 – ல் வழங்கப்பட்டுள்ள பட்டாவை ரத்து செய்யக்கோரி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. அந்த அறிக்கை பற்றி தெரிந்ததால் தான் நான் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

புல எண் 70 – வை உட்பிரிவு செய்யப்பட்டு பட்டா பெற்ற நபர்கள் சமூகம் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 34/2024, 36/2024, 37/2024 மற்றும் 38/2024 ஆகிய வழக்குகள் தாக்கல் செய்துள்ளார்களா என்றால் தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி நான்கு அசல் வழக்குகளை வழக்கை தாக்கல் செய்த நபர்கள் வாபஸ் பெற்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது.

ஒப்படைப்பு பெற்ற நபர்கள் ஒப்படைப்பு நிபந்தனைபடி விவசாயம் செய்யப்படவில்லை என்றும் எனவே நிபந்தனை மீறல்கள் உள்ளது என்றும், நில ஒப்படைப்பினை ரத்து செய்ய வேண்டும் என்று மானாமதுரை வருவாய் வட்டாட்சியர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. என்னை ஊர்காரர்கள் தடுத்ததால் நான் விவசாயம் செய்யவில்லை.

தங்கம் ( எ ) தங்கசாமியிடம் நான் கிரையம் பெற்ற அசலை தாக்கல் செய்யவில்லை என்றால் சார்பதிவாளர் நகலை தாக்கல் செய்துள்ளேள். ஒப்படைப்பு நிபந்தனைகள் விபரம் தெரிந்துவிடும் என்பதால் தான் நான் ஒப்படைப்பு உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

கம்மாய் புறம்போக்கை மதுரை மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்கு வருவாய்துறையினர் உதவியாக இருந்து இளையநாயக்கன் கம்மாய் பகுதிகளுக்கு மோசடியாக பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

வழக்கு சொத்தை நான் அனுபவம் செய்யவில்லை என்பதால் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என்னை வழக்கு சொத்தை அனுபவம் செய்யவிடவில்லை.

**மறுவிசாரணை இல்லை.**

**–Sd–**

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**–Sd–**
**District Munsif,**
**Manamadurai.**